வாழ்ந்து காட்டுவோம் திட்டம் - கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தினை சீரமைத்தல் – இளைஞர் பிரதிநிதிகளை சேர்த்தல் மற்றும் மறு சீரமைப்பு செய்யும் வழிமுறைகள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( மஅதி3) துறை

அரசாணை (நிலை ) எண்.119 நாள்: 14 .7.2008.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை நிலை எண்.34, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 09–03–2005.
2. திட்ட இயக்குநர், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நேர்முக கடித எண். 609/வா.கா – அ/2008, நாள் 24.6.2008.

**ஆணை:**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைப்பது குறித்து ஆணை வழங்கப்பட்டது. இதன்படி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் அமைப்பு வருமாறு :–

| | |
|---|---|
| கிராம ஊராட்சித் தலைவர் | – அலுவல் சாரா தலைவர். |
| மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயலர் | – அலுவல் சாரா உறுப்பினர். |
| கிராம கல்விக் குழு பிரதிநிதி ஒருவர். | – உறுப்பினர் |
| கிராம வனக் குழு பிரதிநிதி ஒருவர். கிராம வனக் குழு இல்லாத கிராமங்களில் கிராம குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதார குழு போன்ற தகுதியான குழுவிலிருந்து பிரதிநிதி ஒருவர். | –உறுப்பினர் |
| கிராம சபை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஊனமுற்ற நபர் ஒருவர். | –உறுப்பினர் |
| ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும், அந்தந்த குடியிருப்பில் உள்ள இலக்கு மக்களால் இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவர். | –உறுப்பினர் |

2. மேலும் படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள கடிதத்தில் கண்டுள்ளவாறு திட்ட இயக்குநர், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக இந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கடந்த 18 மாதங்களாக சிறந்த முறையில் செயல்பட்டு வருவதுடன், ஆற்றலளிக்கப்பட்ட ஏழை மக்களின் அமைப்புகளாக உருவாகியுள்ளன என்றும், சமீபத்தில் திட்டத்தினை ஆய்வு செய்த உலக வங்கிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூக தணிக்கைக் குழு போன்ற கிராம அளவிலான மக்களமைப்புகளில் இளைஞர்களின் பங்கேற்பினை அதிகப்படுத்த வேண்டும் எனக் கருத்து தெரிவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இத்திட்ட செயலாக்கத்தின் அனுபவத்தில், கிராம கல்விக் குழு / கிராம வனக் குழு / கிராம குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதார குழுக்களின்

பிரதிநிதிகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்க நடவடிக்கைகளில் முழுமையான ஈடுபாட்டுடன் பங்கேற்பதில்லை எனத் தெரிய வந்துள்ளதாகவும் கிராம அளவிலான பிற குழுக்களின் பிரதிநிதிகள் பெரும்பாலும், இலக்கு மக்களாக இல்லாமல் இருப்பதோடு கிராம வறுமை ஒழிப்புச் சங்க நடவடிக்கைகளில் ஆர்வமற்றவர்களாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாட்டினை ஆய்வு செய்ததன் அடிப்படையில், கிராம வறுமை ஒழிப்புச் சங்க அமைப்பில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு ஒரு செயற்குறிப்பினை அனுப்பி அரசின் ஆணையை வேண்டினார்.

4. மேலும், இனி வரும் காலங்களில், திட்டத்தின் தேவைக்கேற்ப, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் அமைப்பினை சீரமைப்பதெனில், வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநரின் ஆலோசனையுடன், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தலைவரே செய்து கொள்ளலாம் என்பதற்கான அதிகாரத்தையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநரின் கருத்துருவினை கவனமாக ஆய்வு செய்த பின் அரசாணை (நிலை) எண்.34, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 9.3.2005-ல் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் தொடர்பான ஆணைக்கு திருத்தங்கள் கோரிய திட்ட இயக்குநரது கருத்துருவினை ஏற்றுக் கொண்டு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் செய்து அரசு ஆணையிடுகிறது.

1. கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில், உறுப்பினராக உள்ள கிராம கல்விக் குழு, கிராம வனக் குழு போன்ற கிராம அளவிலான பிற குழுக்களின் பிரதிநிதிகளுக்கு பதிலாக, இலக்கு மக்களிலிருந்து இளைஞர்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினராக நியமிக்க வேண்டும்.

2. இளைஞர்களை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினராக நியமிமக்க பின்வரும் நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். இளைஞர்களுக்கான சிறப்புத் திட்டத்தின் பகுதியாக, கிராம அளவில் ஆண்களுக்கென ஒன்றும், பெண்களுக்கென ஒன்றுமாக அமைக்கப்படும் இளைஞர் மன்றங்களின் உறுப்பினர்களாக உள்ள இலக்கு மக்களிலிருந்து ஓர் ஆணும், ஒரு பெண்ணும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். இந்த பிரதிநிதிகளுக்கான தேர்வு இளைஞர் மன்றக் கூட்டத்தில் நடத்தப்பட்டு, கிராம சபையில் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

3. சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயலர், கிராம வறுமை ஒழிப்புச் சங்க அலுவல் சாரா உறுப்பினர் என்பதற்கு பதிலாக 'ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு மூலம் நியமிக்கப்பட்ட கூட்டமைப்பின் நிர்வாகி ஒருவர்' கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினராக நியமிக்கப்படுவார் என மாற்றம் செய்யப்படுகிறது.

4. ஓய்வு பெறும் உறுப்பினர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதியுடையவர்களெனவும், ஓர் உறுப்பினர் அதிகபட்சம் இரண்டு முறை உறுப்பினராக செயல்படலாமெனவும் மாற்றம் செய்யப்படுகிறது.

5. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு குறைந்தபட்சம் 50% கிராம வறுமை ஒழிப்பு சங்கப் பிரதிநிதிகள் புதிய உறுப்பினர்களாக இருப்பர் இந்த நிபந்தனையை அமலாக்குவதற்கான வழிமுறைகளை கிராம சபை முடிவு செய்யும்.

6. கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களில் குறைந்த பட்சம் 30% தாழ்த்தப்பட்ட வகுப்பு / மலை சாதியினர் பிரிவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மேலும், குடியிருப்பு பிரதிநிதிகளில் குறைந்த பட்சம் 50% மிகவும் ஏழை பிரிவைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

7. இனி வரும் காலங்களில், திட்டத்தின் தேவைக்கேற்ப கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் அமைப்பினை சீரமைப்பதெனில் வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநரின் ஆலோசனையுடன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட தலைவரே செய்து கொள்ளலாம் என்பதற்கான அதிகாரமளித்து ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக்வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.